வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம்
वी.ओ. चिदम्बरनार पत्तन प्राधिकरण
V.O.Chidambaranar Port Authority
(Ministry of Ports,Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate, Tuticorin -628 004
Tamilnadu

SAGARMALA
Certificate under :
IMS - ISO 9001:2015; ISO 14001:2015 &
ISO 45001:2018 and ISPS compliant Port

Fax : 91-461-2352232
Email id : pro@vocport.gov.in
Website : www.vocport.gov.in

**Public Relations Office**

Press Release No: 28 Date: 22.12.2025

## V.O. Chidambaranar Port creates history by handling longest container vessel with highest container carrying capacity

V.O. Chidambaranar Port Authority, Tuticorin, achieved a major milestone with the successful berthing of M.V. MSC Michaela, with Length Overall (LOA) of 304 metres and Beam of 40 metres, at the Dakshin Bharat Gateway Terminal on December 21, 2025. This landmark event marks the arrival of the longest container vessel and the highest container-carrying capacity vessel with 6,724 TEUs of containers, ever to berth at the port, underscoring its growing prominence in India's maritime sector.

The progression from handling M.V. MSC Petra with a Length Overall (LOA) of 299.5 metres in May 2022 to the successful arrival of M.V. MSC Michaela, highlights the substantial enhancement of V.O. Chidambaranar Port's operational capabilities. MSC Michaela, which arrived from the Port of Colón, Panama, and is scheduled to sail to Colombo, Sri Lanka, is handling a total of 3,977 TEUs at the port. This includes 2,676 TEUs of import containers, 1,104 TEUs of export containers, 148 TEUs involving restow operations, and 49 TEUs of transhipment containers.

It is noteworthy that during the current financial year up to November 2025–26, the port handled 5,62,928 TEUs of containers, as against 5,20,919 TEUs in the corresponding period of 2024–25, registering an increase of 8.06%.

In the commemorative event held at V.O. Chidambaranar Port's DGBT container terminal, Shri Sushant Kumar Purohit IRSEE, Chairperson, VOC Port, stated that the successful handling of M.V. MSC Michaela reflects the Port's recent infrastructure upgrades such as enhancing the maximum draft to 14.20 meters, widening the turning circle of the Port's basin from 488 metres to 550 metres, operationalisation of the DPE facility, and the recent induction of 4th tug with 60 Tonne Bollar Pull to manoeuvre large container vessels. He further stated that the upcoming Outer Harbour project will significantly strengthen VOC Port's position as a key maritime gateway for South India.

The event was graced by Shri Sushant Kumar Purohit, IRSEE, Chairperson, VOC Port, Shri Rajesh Soundararajan, IAS, Deputy Chairperson, P. Kavin Maharaj, Chief Vigilance Officer, Shri Vikas Nair, Customs Commissioner, Tuticorin, Mr Vujnovic Tripo, Captain of the vessel, Mr Senthil Kumar, CEO, DBGT Terminal, Shri Benny George, Sr. General Manager, MSC Agency India Limited, senior officials from Port and delegates from trade bodies.

The above details were furnished in a Press -Release by the V.O. Chidambaranar Port Authority today.

Public Relations Officer

வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம்
वी.ओ. चिदम्बरनार पत्तन प्राधिकरण
V.O.Chidambaranar Port Authority
(Ministry of Ports,Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate, Tuticorin -628 004
Tamilnadu

Certificate under :
IMS - ISO 9001:2015; ISO 14001:2015 &
ISO 45001:2018 and ISPS compliant Port

Fax : 91-461-2352232
Email id : pro@vocport.gov.in
Website : www.vocport.gov.in

**மக்கள் தொடர்பு அலுவலகம்**

**பத்திரிக்கை செய்தி : 28** **நாள்: 22.12.2025**

**வ.உ. சிதம்பரனார் துறைமுகம் அதிக சரக்குபெட்டகங்களை கையாளும் திறன் உடைய மிக நீளமான சரக்கு பெட்டக கப்பலை கையாள்வதன் மூலம் வரலாற்று சாதனையை படைத்துள்ளது.**

வ.உ. சிதம்பரனார் துறைமுக ஆணையம் டிசம்பர் 21, 2025 அன்று தக்ஷின் பாரத் கேட்வே சரக்குபெட்டக முனையத்தில், 304 மீட்டர் நீளம் (LOA) மற்றும் 40 மீட்டர் அகலம் கொண்ட M.V. MSC மைக்கேலாவை என்ற சரக்குபெட்டக கப்பலை வெற்றிகரமாக கையாண்டு சாதனை படைத்துள்ளது. இது இந்தியாவின் கடல்சார் துறையில் அதன் வளர்ந்து வரும் முக்கியத்துவத்தை வலுப்படுத்தும் விதமாக இக்கப்பலை கையாள்வதின் மூலம், 6,724 TEU சரக்கு பெட்டகங்களை கையாளும் திறன் கொண்ட மிக நீளமான சரக்கு பெட்டக கப்பலின் வருகை துறைமுகத்தின் ஒரு மைல்கல்லை எட்டியது.

துறைமுகத்தில் 2022 மே மாதம் 299.50 மீட்டர் நீளம் LOA உடன் M.V. MSC பெட்ரா என்ற சரக்குபெட்டக கப்பலை கையாள்வதில் இருந்து M.V. MSC மைக்கேலாவின் வருகை வரையிலான வளர்ச்சி வ.உ. சிதம்பரனார் துறைமுகத்தின் நிலையான செயல்பாட்டுத் திறனில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை பிரதிபலிக்கிறது.

பனாமாவின் கொலோன் துறைமுகத்திலிருந்து வந்த MSC மைக்கேலா என்ற சரக்குபெட்டக கப்பல், வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் 3977 TEU சரக்கு பெட்டகங்கள் கையாளப்பட்டு மீண்டும் இலங்கையின் கொழும்பு துறைமுகத்திற்கு பயணிக்கும். இதில் 2676 TEU சரக்குபெட்டகங்கள் இறக்குமதிக்கும், 1104 TEU சரக்குபெட்டகங்கள் ஏற்றுமதிக்கும், 148 TEU சரக்கு பெட்டகங்கள மறுசீரமைப்பு செய்யுவும் மற்றும் 49 TEU சரக்கு பெட்டகங்களை சரக்குபரிமாற்றம் ஆகிய செயல்பாடுகள் நடைபெற்றது.

நடப்பு நிதியாண்டில் நவம்பர் 2025-26 வரை, துறைமுகம் 5,62,928 TEU சரக்கு பெட்டகங்களைக் கையாண்டுள்ளது குறிப்பிடத்தக்கது, இது 2024-25 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 5,20,919 TEU சரக்குபெட்டகளை விட அதிகமாக கையாண்டு 8.06% அதிகரித்துள்ளது. வ.உ. சிதம்பரனார் துறைமுகத்தின் தக்ஷின் பாரத் கேட்வே சரக்குபெட்டக முனையத்தில் (DBGT) நடைபெற்ற நிகழ்வில், திரு. சுஷாந்த் குமார் புரோஹித், இ.ர.ப.இ.பெ, வ.உ.சி துறைமுகத்தின் தலைவர், அவர்கள் M.V. MSC மைக்கேலா சரக்குபெட்டக கப்பலை வெற்றிகரமான கையாளுதல், துறைமுகத்தின் சமீபத்திய உள்கட்டமைப்பு மேம்பாடுகளை பிரதிபலிக்கிறது என்று கூறினார், அதாவது அதிகபட்ச மிதவை ஆழம் 14.20 மீட்டராக உயர்த்துதல், துறைமுக கப்பல் சுற்றுவட்ட பாதையினை 488 மீட்டரிலிருந்து 550 மீட்டராக விரிவுபடுத்துதல், துறைமுகத்திற்குள் நேரடி நுழைவு சேவை (Direct Port Entry) போன்ற வசதியை செயல்படுத்துதல் மற்றும் 60 டன் போலார்ட் புல் திறன் கொண்ட 4வது இழுவை கப்பல் சமீபத்தில் அறிமுகப்படுத்தியது ஆகும். மேலும் அவர் கூறுகையில் வரவிருக்கும் வெளி துறைமுக (Outer Harbour) திட்டம் தென் இந்தியாவிற்கான முக்கிய கடல் வர்த்தக நுழைவாயிலாக வ.உ. சிதம்பரனார் துறைமுகத்தின் நிலையை குறிப்பிடத்தக்க அளவில் வலுப்படுத்தும் என தெரிவித்தார்.

இந்த நிகழ்வில், வ.உ.சி துறைமுகத் தலைவர் திரு. சுஷாந்த் குமார் புரோஹித், IRSEE, அவர்கள் வ.உ.சி துறைமுகத் துணைத் தலைவர் திரு. ராஜேஷ் சௌந்தரராஜன், இ.ஆ.ப., தலைமை கண்காணிப்பு அதிகாரி, திரு. கவின் மஹாராஜ், IOFS, தூத்துக்குடி சுங்க ஆணையர் திரு. விகாஸ் நாயர், IRS கப்பலின் கேப்டன் திரு. வுஜ்னோவிக் டிரிபோ, DBGT முனையத்தின் தலைமை நிர்வாக அதிகாரி திரு. செந்தில் குமார், MSC ஏஜென்சி இந்தியா லிமிடெட்டின் மூத்த பொது மேலாளர் திரு. பென்னி ஜார்ஜ், துறைமுகத்தின் மூத்த அதிகாரிகள் மற்றும் வர்த்தக அமைப்புகளின் பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் இன்று வெளியிட்டுள்ள பத்திரிக்கை செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

மக்கள் தொடர்பு அதிகாரி